# செய்தி வெளியீடு

**இலங்கையின் பொருளாதாரம் 2019 இரண்டாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.**

## தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2019 இரண்டாம் காலாண்டு


**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு **அமைச்சு**

**தொ.பே**: 94-011-2147071 **தொ.நகல்**: 94-011-2877938 **மின்னஞ்சல்**: national.accounts@statistics.gov.lk



இலங்கையின், 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (ஏப்ரல், மே, ஜூன்)உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

ஏப்ரல் 21, 2019 அன்று எதிர்கொண்ட 'ஈஸ்டர் சண்டே தாக்குதலால் ஏற்பட்ட விளைவுகளை இந்த காலாண்டுப் பொருளாதாரம் பிரதிபலிக்கிறது**.** சேவைத் துறை 2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாவது காலாண்டு தொடரில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. 'தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள்' மற்றும் 'போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்துதல்' நடவடிக்கை ஆகியவற்றில் அதிக தாக்கம் காணப்படுகிறது. இருப்பினும் மிகவும் பாதிக்கப்பட்ட சேவை நடவடிக்கைகளுக்கு மத்தியில், 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' வளர்ச்சி வீதத்தில் சாதகமான அதிகரிப்பை அடைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 1.6 சதவீதமென தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. நடப்பு, நிலையான (2010) விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019 இரண்டாம் காலாண்டில் ரூபா 3,620,736 மில்லியன்களாகவும், ரூபா 2,315,995 மில்லியன்களாகவும் முறையே பதிவு செய்ததுடன் , 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நடப்பு, நிலையான (2010) விலையில் ரூபா 3,490,538 மில்லியன்களாகவும், ரூபா 2,280,019 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 7.4 சதவீதம், 25.8 சதவீதம், 59.5 சதவீதம் மற்றும் 7.4 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 1.0 சதவீதம், 1.4 சதவீதம் மற்றும் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளன.

**வரைபடம் 1: இரண்டாம் காலாண்டில் வளர்ச்சி வீதங்களின் ஒப்பீடு (2018, 2019)**




விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், 2018 ஆம் இரண்டாம் காலாண்டோடு ஒப்பிடும்போது 'எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக', நன்னீர் மீன்பிடி என்பன 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் முறையே 26.0 சதவீதம் மற்றும் 28.3 சதவீதம் கவனிக்கக் கூடிய நேர் வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், 'வேறு நிலைத்திருக்கிற பயிர்கள்', 'இறப்பர் உற்பத்தி', 'கால்நடை வளர்ப்பு', 'பழவகைகளின் வளர்ச்சி', 'தேயிலை வளர்ச்சி' என்பன கணிசமான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது: அவை முறையே 8.0 சதவீத, 4.7 சதவீத, 3.4 சதவீத,2.5 சதவீத மற்றும் 1.3 சதவீதங்களாகும். யால பருவகாலத்தில் குறைந்த நெல் உற்பத்தி 'அரிசி உற்பத்தியை' 1.2 சதவீதமாக சுருக்கி உள்ளது. சோள உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதால் 'தானியங்கள் உற்பத்தி' 3.3 சதவீதத்தால் சுருங்கி உள்ளது. வானிலைத் திணைக்களம் வெளியிட்டுள்ள சாதகமற்ற வானிலை மற்றும் எச்சரிக்கைகள் 'கடல் மீன்பிடி' நடவடிக்கைகளை 5.1 சதவீதத்தால் சுருக்கி உள்ளது.

2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகள் மேலும் 1.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. உற்பத்தித் துறை நடவடிக்கையின் உப பிரிவுகளான 'புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு', ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்', 'தளபாட தயாரிப்பு' மற்றும் ' நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்' முறையே 6.2 சதவீத, 4.8 சதவீத, 4.8 சதவீத மற்றும் 2.4 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்துள்ளது. 'மரம் மற்றும் மரப் பொருட்களின் உற்பத்தி', 'காகிதப் பொருட்களின் உற்பத்தி ', ' அடிப்படை உலோகப் பொருட்களின் உற்பத்தி 'ஆகியவை இந்த காலாண்டில் 2018 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது முறையே 24.4 சதவீதம், 11.8 சதவீதம், 12.5 சதவீதம் பெரிதும் சுருங்கியுள்ளன, அதே நேரத்தில்' உணவு பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் உற்பத்தி' 0.2 சதவிகிதம் சற்று சுருங்கியுள்ளது. 2018 மற்றும் 2019 ஆகிய இரு காலாண்டுகளின் ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகளை ஒப்பிடும் போது, மற்றும் 'மின்வலு, எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்', 'நீர் சேகரிப்பு , சுத்திகரிப்பு' மற்றும் வழங்கல்', 'கழிவுநீர் மற்றும் கழிவு சுத்திகரிப்பு மற்றும் 'கட்டடவாக்கம்' நடவடிக்கைகள் முறையே 7.0 சதவீதம், 7.3 சதவீதம், 10.8 சதவீதம் மற்றும் 2.4 சதவீதத்தால் விரிவாக்கம் அடைந்துள்ளன. 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' 0.5 சதவீதமாக சிறிய சுருக்கத்தையே பதிவு செய்துள்ளது.

2018 இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'தொலைத்தொடர்பு' மற்றும் 'காப்புறுதி, மறு காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதி ஆகிய துணை நடவடிக்கைகளால் சேவைத் துறையின் செயல்திறன் சிறப்பாக ஆதரிக்கப்பட்டு, முறையே 12.0 சதவீதம், 8.1 சதவீதம், 7.4 சதவீதம் மற்றும் 6.7 சதவீத அதிக வளர்ச்சி வீதங்களை கணிசமாக அடைந்துள்ளன. 'மொத்த

மற்றும் சில்லறை வர்த்தகம் இந்த காலகட்டத்தில் 1.3 சதவீதம் சற்று விரிவடைந்துள்ளது, அதே நேரத்தில் ‘தபால் மற்றும் விரைவுத் தபால் (கூரியர்) நடவடிக்கைகள்’, ‘துறைசார் சேவைகள்’ மற்றும் ‘ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்’ முறையே 2.8 சதவீதம், 1.6 சதவீதம் மற்றும் 1.5 சதவீதம் சிறிய வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. ‘தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகள்’ 9.9 சதவீத கவனிக்கக் கூடிய சுருக்கத்தை பதிவு செய்துள்ள வேளை ‘போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்துதல்’ நடவடிக்கை 1.5 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது. ‘மனித சுகாதார நடவடிக்கைகள்’ மற்றும் “கல்வி” ஆகியவையும் 2018 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 0.5 சதவீதம் மற்றும் 1.0 சதவீதம் லேசான சுருக்கங்களை அறிவித்தன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2019 ஆம் இரண்டாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

திருமதி. ஐ.ஆர். பண்டார

பணிப்பாளர் நாயகம்